# KONGU ARTS AND SCIENCE COLLEGE

(AUTONOMOUS)

Erode-638107, Tamilnadu

## DEPARTMENT OF TAMIL

### Office Bearers

Chairperson :Mr.V.Boominathan, Assistant Professor

Vice Chairperson : Mr.K.Elavarasan, Assistant Professor

| S.No. | Name of the Student | Class | Post |
|---|---|---|---|
| 1 | S.RISWANTH | II B.A.Tamil | President |
| 2 | M.DINESH KUMAR | II B.A.Tamil | Vice President |
| 3 | R.KAVYASRI | II B.A.Tamil | Secretary |
| 4 | M.KOWSALYA | II B.A.Tamil | Treasurer |
| 5 | B.T.DINAKAR | II B.A.Tamil | Joint Secretaries |
| 6 | E.LOGUPRIYA | II B.A.Tamil | |

## Activities carried out through Association

1. கொங்கு கலை அறிவியல் கல்லூரி, தமிழ்த்துறையின் தமிழ்மன்ற தொடக்க விழா 26.06.2020 அன்று நடைபெற்றது. இணைய வழியில் நடைபெற்ற இவ்விழாவில் கவிஞர் நா. முத்துநிலவன் அவர்கள் பங்குபெற்று ,,எதை மறந்தோம், எங்கே போகிறோம்‘‘ என்ற தலைப்பில் சிறப்புரையாற்றி தமிழ்மன்ற நிகழ்வுகளை தொடங்கிவைத்தார்.

2. கொங்கு கலை அறிவியல் கல்லூரி, தமிழ்த்துறை சார்பாக நான்கு நாள் (16.07.2020 - 19.07.2020) இணைய வழி தேசியக் கருத்தரங்கம் “பன்முக நோக்கில் தமிழ் இலக்கியம்” என்ற பொருண்மையில் நடைபெற்றது. 16.07.2020 அன்று ,,வா வாழ்வே நிகழ்‘‘ என்ற தலைப்பில் அழகன் கருப்பண்ணன் சிறப்பு விருந்தினாராக பங்கேற்று சிறப்புரையாற்றினார். 17.07.2020 அன்று ,,எந்நாளும் இன்பமே‘‘ என்ற தலைப்பில் இரா.யுவராஜ் (உதவிப்பேராசிரியர், ஈரோடு கலை அறிவியல் கல்லூரி) அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். 18.07.2020 அன்று ,,குறுந்தொகையில் பிரிவு‘‘ என்ற பொருண்மையில் முனைவர் த. விஜயலட்சுமி (இணைப்பேராசிரியர் கேரள பல்கலைக்கழகம்) அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார். 19.07.2020 அன்று ,,காப்பியங்களில் பெண்ணியம்‘‘ என்ற தலைப்பில் இதழியலாளர் தி.பவளசங்கரி அவர்கள் சிறப்புரை வழங்கினார்.
   சிறப்புரையாற்றினார். 18.07.2020 அன்று ,,குறுந்தொகையில் பிரிவு‘‘ என்ற பொருண்மையில் முனைவர் த. விஜயலட்சுமி (இணைப்பேராசிரியர் கேரள பல்கலைக்கழகம்) அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார். 19.07.2020 அன்று “காப்பியங்களில் பெண்ணியம்‘‘ என்ற தலைப்பில் இதழியலாளர் தி.பவளசங்கரி அவர்கள் சிறப்புரை வழங்கினார்.

3. கொங்கு கலை அறிவியல் கல்லூரி, தமிழ்த்துறையின் 2020-2021 ஆம் கல்வியாண்டு முதலாமாண்டு மாணவர்களுக்கான புத்தாக்கப்பயிற்சி 24.08.2020 முதல் 28.08.2020 வரை நடைபெற்றது. இதில் 24.08.2020 அன்று தமிழ்த்துறையின் செயல்பாடுகள் மற்றும் துறையின் சிறப்பு குறித்த அறிமுகத்தை தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் நா. கலைவாணி அவர்கள் நிகழ்த்தினார்கள். 25.08.2020 அன்று மாணவர்களுக்கு திறனறித்தேர்வு நடைபெற்றது. 26.08.2020 அன்று ,,வெல்லத் தமிழ் பயில்‟ என்ற தலைப்பில் முனைவர் த.விஸ்வநாதன் (மொழித்துறைத் தலைவர், ஸ்ரீ இராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி கோவை) அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்று உரையாற்றினார். 27.08.2020 அன்று ,,இலக்கிய இன்பம்‟ என்ற தலைப்பில் திரு ஐ. செல்வம் (துறைத்தலைவர், நவரசம் மகளிர் கலை அறிவியல் கல்லூரி) அவர்கள் பங்கேற்று சிறப்புரையற்றினார். 28.08.2020 அன்று ,,Communicative English‟ என்ற தலைப்பில் எஸ்.விஜயலட்சுமி (உதவிப்பேராசியர் ஆங்கிலத்துறை, கொங்கு கலை அறிவியல் கல்லூரி) அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

4. கொங்கு கலை அறிவியல் கல்லூரி, தமிழ்த்துறையின் கொங்கு கலை பண்பாட்டு ஆய்வு மையம் சார்பாக 09.11.2020 மற்றும் 10.11.2020 ஆகிய இரண்டு நாட்கள் "கொங்கு நாட்டின் சிறப்புகளும் புழங்கு பொருட்களும்" என்ற பொருண்மையில் இணைய வழியிலான கருத்தரங்கம் நடைபெற்றது. முதல் நாள் ,,கொங்கு நாட்டின் பெருமைகள்‟ என்ற தலைப்பில் கோவை இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியின் மொழித்துறைப் பேராசிரியர் முனைவர்.ந.இராசேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இரண்டாம் நாள் ,,கொங்கு நாடும் புழங்கு பொருட்களும்‟ என்ற தலைப்பில் ஓய்வுபெற்ற தொல்லியல் துறை உதவி இயக்குநர் முனைவர்.தி.சுப்பிரமணியன் அவர்கள் கொண்டு சிறப்புரையாற்றினார்.

5. கொங்கு கலை அறிவியல் கல்லூரி, தமிழ்த்துறையின் இலக்கிய வட்ட கூட்டம் 11.11.2020 அன்று நடைபெற்றது. கூட்டத்தில் இலக்கிய வட்ட மாணவ உறுப்பினர்கள் கலந்துகொண்டு தங்களது பன்முகத்திறனை வெளிப்படுத்தினர்.

6. கொங்கு கலை அறிவியல் கல்லூரி, தமிழ்த்துறையின் இலக்கிய வட்ட கூட்டம் 11.12.2020 அன்று நடைபெற்றது. கூட்டத்தில் இலக்கிய வட்ட மாணவ உறுப்பினர்கள் தங்களுக்குப் பிடித்த நூலினை 'நூல் மதிப்பீடு' செய்தனர்.

7. கொங்கு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) தமிழ்த்துறையின் இலக்கிய வட்டம் சார்பாக 05.03.2021 அன்று ,கலாச்சாரத்தைப் பெரிதும் காப்பது முதிய தலைமுறையே! இளைய தலைமுறையே!' என்ற தலைப்பில் பட்டிமன்றம் இணையவழியில் நடைபெற்றது. இவ்விழாவில் பேராசிரியர்களின் வழிகாட்டுதலின்படி, நடுவராகவும் அணிப்பேச்சாளர்களாகவும் மாணவ மாணவிகள் பங்கேற்று சிறப்பித்தனர்.

8. கொங்கு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), தமிழ்த்துறை தமிழ் மன்ற நிறைவு விழா 08.03.2021 அன்று இணையவழியில் நடைபெற்றது. இவ்விழாவில் முனைவர் சுந்தர ஆவுடையப்பன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு 'இனிதினும் இனிது கேள்' என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.